## 2. உரிமைப் பிரச்னைகள்,

### அ. மாண்புமிகு முதலமைச்சர் மீது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 184-வது விதியின் கீழ், மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேம்ஸ் அவர்கள் அவை உரிமை மீறல் பிரச்னையை அவையில் கொண்டு வருவதற்கு அனுமதி கேட்டுள்ளார். அதே போன்று மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்களும் அனுமதி கேட்டுள்ளார். அனுமதி வழங்கப் படுகிறது. திரு. ஜே. ஜேம்ஸ்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, பல நாட்களாக நான் இதைக் கேட்டுக் கொண்டிருந்தேன். இன்றைக்கு அதற்கான தகவல்களை நான் தயாராகக்கொண்டு வரவில்லை. இன்றைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று எனக்கு தாங்கள் சொல்லவும் இல்லை......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதில் உங்களுக்கு அவகாசம் வேண்டும் என்றால், இதை திங்கள்கிழமை எடுத்துக் கொள்ளலாம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் அதற்கு ஒப்புக்கொள்கிறார்கள். ஆகவே இதை திங்கள்கிழமை எடுத்துக் கொள்கிறேன்.

### ஆ. 'துக்ளக்' பத்திரிகை மீது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, அவை உரிமை மீறல் குறித்த பிரச்னை. பேரவையின் 184-வது விதியின் கீழ் அவை உரிமை மீறல் குறித்த ஒரு பிரச்னையை அவையில் எழுப்ப மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆர். இராதா அனுமதி கேட்டுள்ளார். அவருக்கு அனுமதி அளிக்கப் படுகிறது. திரு. எஸ். ஆர். இராதா.

திரு. எஸ். ஆர். இராதா : பேரவைத் தலைவர் அவர்களே, பேரவையின் 184-வது விதியின் கீழ் அவை உரிமை மீறல் குறித்த கீழ்கண்ட பிரச்னையை அவையில் எழுப்ப அனுமதி கோருகிறேன். 15-4-79 வெளிவந்துள்ள 'துக்ளக்' பத்திரிகையில் தலையங்கத்தில் சட்டமன்ற நடவடிக்கை பற்றி எழுதப்பட்டிருக்கிறது. அதில் மன்றத்தில் நடக்காததைப்பற்றி எழுதப்பட்டதன் மூலம் மன்றத்தின் உரிமை மீறப்பட்டிருக் கிறது. 7-4-79 அன்று எடுக்கப்பட்ட நடவடிக்கைப் பற்றி களங்கம் கற்பித்தும் எழுதப்பட்டிருக்கிறது என்பதையும், தலைவர் அவர்களுடைய தீர்ப்பை களங்கப்படுத்துகிற வகை யிலும் பல்வேறு பிரச்னைகளைப்பற்றி அதில் எழுதப்பட்டிருக் கிறது என்பதை நான் தங்களது கவனத்திற்கு கொண்டு வர ஆசைப்படுகிறேன்.

அதில் குறிப்பாக தனிப்பட்ட முறையில் என்னை களங்கப்படுத்துகிற வகையில் நான் அவையில் நடக்கக் கூடாத வகையில் தவறான வகையில் நடந்து கொண்டதாகவும், மிகவும் கேவலமான முறையில் என்னை

1979 ஏப்ரல் 21] [திரு. எஸ். ஆர். இராதா]

தனிப்பட்ட முறையில் தாக்கி எழுதப்பட்டிருக்கிறது. இந்த அவையில் இருக்கின்ற உறுப்பினர் என்ற முறையில் என்னைப் பற்றி எழுதப்பட்டிருக்கிற இந்த நேரத்தில் அது இந்த அவையிலுள்ள அத்தனைபேரையும் பாதிக்கும் அளவுக்கு நீங்கள் கருத வேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். என்னைப் பொறுத்தவரையில் சில பத்திரிகைகளில் வேண்டுமென்றே திட்டமிட்டு என்னுடைய அரசியல் வாழ்வை கேவலப்படுத்த வேண்டும் என்ற வகையில் எழுதப்பட்டு வந்திருக்கிறது என்பதை நான் குறிப்பிட்டாக வேண்டும். அப்படி எழுதுவதற்குக் காரணமாக இருந்ததாகச்சொல்லுகின்ற காரணம் கடந்த 10-3-79 அன்று நடைபெற்ற இந்த சில நிகழ்ச்சிகளில் என்னுடைய பெயரையும் சம்பந்தப்படுத்தி என்னைக் களங்கப்படுத்துகின்ற அளவில் எழுதப்பட்டிருக்கிறது. 10-3-79 அன்று இந்த மன்றத்தில் நடைபெற்ற இந்தப் பிரச்னையில் நான் எந்த அளவுக்கு சம்பந்தப்பட்டு இருந்தேன் என்பதையும்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சுருக்கமாகச் சொல்ல வேண்டும். விளக்கமாகச் சொல்ல முடியாது. நீங்கள் சொல்லிக் கொண்டிருப்பதைப் பார்த்தால் இதை முடிப்பதற்கு ஒரு மணி நேரம் ஆகும் போல் தோன்றுகிறது. சீக்கிரமாக முடியுங்கள்.

திரு. எஸ். ஆர். இராதா: பேரவைத் தலைவர் அவர்களே, 10-ம் தேதி நடைபெற்ற சம்பவத்தில் என்னைப்பற்றி எதிர்கட்சித் தலைவர் குறிப்பிட்டதாகச் சொன்ன சில வார்த்தைகள் அன்றைக்கு முரசொலி பத்திரிகையிலும் தினகரன் பத்திரிகையிலும் வெளிவந்தது. அந்த பத்திரிகைகள் மீது நான் உரிமை மீறல் பிரச்னை கொண்டு வந்திருந்தேன். தாங்கள் பெருந்தன்மையோடு அந்த பிரச்னையை விட்டுவிடலாம் என்று விட்டுவிட்டீர்கள். ஆனால், பின்னால் அன்று 10-ம் தேதி நடைபெற்றதை காரணமாக வைத்துக்கொண்டு திடீரென்று 29-ம் தேதியன்று 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகையும் வேறு ஒரு பத்திரிகையும் ஒரு கட்டுரை எழுதியிருக்கிறது. அந்தக் கட்டுரை எழுதுவதற்கு யார் யார் காரணம் என்று எனக்குத் தெரிந்திருந்தாலும்கூட, வேண்டுமென்றே திட்டமிட்டு என்னைக் களங்கப்படுத்த வேண்டும் என்று முயற்சித்திருக்கின்றார்கள். இதற்கு என்ன காரணம் என்பது எனக்கு தெரிந்திருந்தாலும், என்னுடைய அரசியல் வாழ்வில், பேரறிஞர் அண்ணா அவர்களால் ஆளாக்கப்பட்டு, இன்றைக்கு புரட்சித் தலைவர் அவர்களுடைய தலைமையில் கண்ணியமாகவும், மிகுந்த கட்டுப்பாடாகவும் பணியாற்றுகின்ற என்னை—எப்படியும் களங்கப்படுத்த திட்டமிட்டு, இந்தக் காரியங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆனால் 10 ஆம் தேதியன்று கூட்டத் தொடரில் இல்லாத ஒரு பிரச்னை திடீரென்று எழுப்பப்பட்டு, இன்றைக்கு ஒரு பெரிய பூதாகாரமாக சொல்லப்படுகின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதை 'துக்ளக்' பத்திரிகை தலையங்கமாக எழுதி, நாடு முழுவதும் என்னைக்

களங்கப்படுத்துகின்ற வகையிலே விநியோகம் செய்யப்பட்டிருக்கின்றது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல், அவைத் தலைவராக இருக்கும் உங்களுடைய நடவடிக்கை பற்றியும் அதிலே கண்டித்து எழுதப்பட்டிருக்கிறது. எனவே, இது அவை உரிமை மீறினதாக இருக்கின்றது என்பதை நான் தெரிவித்து, இதை அவை உரிமை மீறல் குழுவிற்கு அனுப்பி, தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் எழுப்பிய பிரச்னை பத்திரிகை மீது உள்ளதால், அப்பத்திரிகையின் ஆசிரியருக்கு எழுதிக் கேட்டு, அவர் விளக்கம் பெற்று, பின் என் தீர்ப்பை *அளிக்கிறேன்.

## 3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

## நீரார் சுரங்கப்பாதை வேலையில் ஏற்பட்ட பெரும் வெடி விபத்து குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கோவை மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், வால்பாறை மலையில் நடைபெற்று வருகிற நீரார் சுரங்கப் பாதை வேலையில் 18 4-1979 ஆம் தேதி பெரும் வெடிவிபத்து ஏற்பட்டு இரண்டு தொழிலாளிகள் இறந்தும். சுமார் 25 தொழிலாளர்கள் கடுமையான காயங்கள் பட்டும் உள்ளதால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்கப் பேரவையில் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டு,

(1) திரு. கே. ரமணி,

(2) திரு. ஆர். வெங்கிடு

ஆகியோர் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசர முக்கியமானது என்பது குறித்து மிகச் சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். திரு. ஆர். வெங்கிடு.

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு : தலைவர் அவர்களே, இரண்டு நாட்களுக்கு முன்பு பொள்ளாச்சி தாலூகா வால்பாறை பகுதியிலே நீராறு அணைக்கட்டுப் பகுதியில் தொழிலாளர்கள் இந்த சுரங்கப் பகுதியில் வேலை செய்து கொண்டிருக்கின்ற நேரத்திலே வெடி விபத்து ஏற்பட்டிருக்கிறது. மலையிலே வெடிவைத்து பாறையைத் தகர்க்கக்கூடிய நேரத்திலே, எந்தவிதமான ஆபத்தும் ஏற்படாத அளவுக்கு சரியான பாதுகாப்புடன், வெடி வைத்து மேற்கொள்ளக்கூடிய வேலைகளை, ஏற்பாட்டை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் செய்ய வேண்டும். அதிகாரிகள் கவனக் குறைவு ஏற்பட்டு, சரியான

*27-4-1979ம் தேதி தீர்ப்பளிக்கப்பெற்றது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS